முன்னிலை: திரு.சதாம்உசேன், B.A.,L.L.B.,
(மு.கூ.பொ) குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.92/2023

அ.சா.1

2026-ம் ஆண்டு ஆகஸ்ட் 20-ம் தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி – 1 வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கமலா | தொழில் | |
| கணவர் பெயர் | சேகர் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 03.13 மணி,

Accused A1)Selvaraj, A2)Muthuraman, A3)Moorthi are present. Advocate Mr.Sivasankar present for Advocate Mr.A.C.Madheswaran for all accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் ஊ.மாரமங்கலம் கரட்டுக்காட்டில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். எங்கள் குடும்பத்திற்கும், எதிரிகளின் குடும்பத்திற்கும் இடையே தடவழிப்பிரச்சினை இருந்து வருகிறது. கடந்த 13.11.2022 ஆம் தேதி எனது மகன் யுவராஜ் என்பவர் இருசக்கர வாகனத்தை வேமகாக ஓட்டுகிறார். அப்படி ஓட்டக்கூடாது என்று எதிரி செல்வராஜ் என்னிடம் சொன்னார். நான் என் மகன் மெதுவாக தான் ஓட்டுகிறார் என்று சொன்னேன். எங்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

2. சத்தம் கேட்டு பொதுமக்கள் கூட்டமாக கூடிவிட்டார்கள். கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நான் கீழே விழுந்து எனக்கு முதுகில் காயம் ஏற்பட்டது. நான் ஓமலூர் அரசு மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றேன். அப்போது போலிசார் அங்கு வந்து என்னிடம் கைரேகை பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது. ( **அந்த கைரேகை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.20 17:30:30 +0530

3. நான் தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டேன். எதிரிகள் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் கைரேகை செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கைரேகை என்னுடையது. ( **அந்த கைரேகை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலிசார் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

4. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 13.11.2022 ஆம் தேதி காலை சுமார் 09.30 மணியளவில் என் வீட்டின் முன்பாக 1 ஆம் எதிரி என்னை கெட்ட வார்த்தையால் திட்டி, கையால் என் கன்னத்தின் மீது அடித்தார் என்றும், 2 ஆம் எதிரி கல்லால் என் முதுகில் அடித்தார் என்றும், 3 ஆம் எதிரி என் நெஞ்சின் மீது எட்டி உதைத்து கையால் என் முகத்தின் மீது அடித்தார் என்றும், 1 ஆம் எதிரி என்னை பார்த்து கொலைமிரட்டல் விடுத்ததாகவும் கூறி புகார் வாக்குமூலம் அளித்துவிட்டு, தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 03.18 மணி.**

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.08.20 17:30:33 +0530